கோரிக்கைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்கிறார்களா அல்லது அதன்மூலம் எடுக்கப்படுகின்ற குறைகளை நீக்குவதற்கு இந்த வேளாண்மைத் துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை களைவதற்காகத்தான் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெள்ளிக்கிழமை அன்று விவசாயிகளுடைய குறை தீர்க்கும் நாள் நடத்தப்படுகிறது. அந்தக் கூட்டங்களிலே விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு இன்றைக்குப் பரிசீலத்து வந்திருக்கிறது. உரிய நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. ஆனால் சில விவசாயிகள் சங்கத் தலைவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினையை அரசியல் நோக்கோடு அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்ற நோக்கிலே பேசுகிறார்கள் என்று சொன்னால் அதற்கெல்லாம் அவர்கள் தீர்வு காணமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 253, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

253—

பொன்னேரி தொகுதியில் பால் விநியோகம்

15996—திரு ஏ. ரவிக்குமார்:*

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், மீஞ்சூர், மொண்டியம்மன் நகர் போன்ற பகுதிகளில் பால் விநியோக டெப்போக்கள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை-செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், பொன்னேரி தொகுதியில் பாடியநல்லூர், பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் முகவர்களை

நியமித்து அவர்கள் மூலம் பால் விற்பனை செய்கிறது. எனவே, பொன்னேரித் தொகுதியில் மேலும் புதியதாகப் பால் விற்பனை நிலையங்கள் திறப்பதற்கான கருத்துருக்கள் ஏதும் தற்போதைக்கு இல்லை.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதி சென்னையை ஒட்டி மக்கள் தொகை பெருகி வருகின்ற ஒரு தொகுதியாகும். இப்பகுதியில் நம்முடைய இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் சென்ற ஆண்டு மீஞ்சூர் பொன்னேரி நகரத்தில் பால் விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ததற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மொண்டியம்மன் நகர் பகுதியில் மட்டும் பால் விநியோகம் செய்யப்படுவதில்லை. அங்கு அதிகமான அளவுக்கு மக்கள் வசிப்பதால் அங்கே தனியாக பால் விநியோகம் செய்வதற்கும் ஆயிரம் மக்கள் வசிக்கின்ற அனைத்து கிராமங்களிலும் இப்பால் விநியோகம் செய்வதற்கும் நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொண்டியம்மன் நகருக்கு மிக அருகில் பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. மேலும் அந்தப் பகுதியில் பால் விற்பனை தேவை என்று கருதினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் தற்போது எவ்வளவு பால் கொள்முதல் செய்யப்படுகிறது? எவ்வளவு பால் விநியோகம் செய்யப்படுகிறது? அரசுக்கு இதனால் எவ்வளவு வருமானம்? மேற்கொண்டு இதனை விரிவுபடுத்துவதற்கு நம்முடைய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தில் தினசரி 81,180 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதிலே 39,157 லிட்டர்கள் அந்த மாவட்டத்திலே விற்பனை செய்யப்படுகிறது. மீதி பால் சென்னை நகர மக்களுக்காக சென்னையில் விற்பனை செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 254, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், இருக்கையில் இல்லை, திரு. ஆ. தேவராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.